பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 13 திங்கட்கிழமை 30.10.2023 கதிர் 353

# ரூ. 20,000 சம்பள உயர்வு கேட்டு இன்று நண்பகல் பெரும் போராட்டம்

## பல தொழிற்சங்கங்கள் இணைந்து கொழும்பில் முன்னெடுப்பு

வரவு, செலவுத் திட்டத்தில் இருந்து 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை கோரி இன்று நண்பகல் 12 மணிமுதல் நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்க கூட்டின் இணைப்பாளர் சந்தன சூரிய ஆராய்ச்சி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச மற்றும் மாகாண அரச சேவை ஊழியர்கள் வாழ்வாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே அவர்களுக்கான வாழ்க்கைச் செலவுகளுக்கு முகங்கொடுக்கவல்ல கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

அதன் காரணமாக, அபிவிருத்தி உத்தியோகத்தர்,முகாமைத்துவசேவை உத்தியோகத்தர்,கிராமஉத்தியோகத்தர், சமுர்த்தி, அலுவலக சேவைகள் மற்றும் மாகாண அரச சேவைகள் என்று பல சேவைகள் இணைந்து போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, ஓய்வுபெற்றுச் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள்உறுப்பினர்கள்இருவரை பயங்கரவாதத் தடைப் பட்டியலில் இருந்து விடுவிப்பதாக கடந்த வாரம் ஆளும் தரப்பு திடீரென அறிவித்தது. எமில்காந்தன், முருகேசு ஜேசுதாசன் ஆகிய இருவருமே இவ்வாறு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டவர்கள் என்று பாதுகாப்பு அமைச்சால் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் எமில் காந்தன் மிகவும் பிரபலமான கதாபாத்திரம். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்க வடக்கு கிழக்கில் வாக்குகளைப் பெறுவதைத் தடுப்பதற்காக விடுதலைப்புலிகளுடன் ராஜபக்சே மேற்கொண்டதாகக் கூறப்படும் பணப் பரிமாற்றத்தில் எமில்காந்தன் இடைத்தரகராகச் செயல்பட்டார் என்கிற கதையை சிங்கள ஊடகங்கள் பரவலாக ஒரு காலத்தில் பேசியிருந்தன.

2005ஆம் ஆண்டுக்குப் ☞ 2

## பூஸா சிறையில் செல்பேசிகள் மீட்பு

### நேற்றைய சோதனையில்

பூஸா சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நேற்று மேற்கொண்ட திடீர் சோதனையில் கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல்வேறு தடைசெய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பூஸாசிறையின்பழையபிரிவிலுள்ள 'ஏ' மற்றும் 'டி' விடுதிகளில் உள்ள அறைகளில்குறித்தபொருட்கள்மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர். ☞ 2

## சுகாதார சேவை வெற்றிடங்களை நிரப்ப விரைவிலேயே நடவடிக்கை

### புதிய அமைச்சர் உறுதியளிப்பு

சுகாதார சேவைத் துறையில் காணப்படுகின்றமனிதவளப்பற்றாக் குறையை விரைவில் முழுமைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்வொன்றில் நேற்றையதினம் பற்கேற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது;

நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ☞ 2

## இராமேஸ்வரம் மீனவர்கள் 27பேரும் விரைவில் விடுதலை செய்யப்படுவர்

### அமைச்சர் அலி சப்ரி உறுதியளிப்பு

இராமேஸ்வரம் மீனவர்களை 27 பேர்களை விரைவில் விடுதலை செய்யப்படுவரென இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனியிடம் அயலுறவுத்துறைஅமைச்சர்அலி சப்ரிஉறுதியளித்துள்ளார்.

கொழும்பில்நேற்று, அகிலஇலங்கைமுஸ்லீம் லீக்வாலிபமுன்னணிகள் சம்மேளனத்தின் பொன்விழா நிகழ்வும் 50ஆவது வருடாந்த மாநாடு நடைபெற்றது.

இதில் கலந்துகொள்வதற்காக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் நாடாளுமன்ற ☞ 2

## இந்த உலகிற்குப் பொருந்தக்கூடிய அறிவார்ந்த சந்தை எம்மிடமில்லை

### ஜேவிபி தலைவர் அமெரிக்காவில் தெரிவிப்பு

உலகிற்குபொருந்தக் கூடிய அறிவார்ந்த சந்தையைக் கைப்பற்றுவதில்எம்மிடமில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றுள்ள அவர் அங்குள்ள இலங்கையர்கள் மத்தியில் நேற்றைறு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

உலகில் எந்த நாடுகளுக்கம் தனியாக வாழ முடியாது. உலகப் பொருளாதாரம்பிணைக் கப்பட்டுள்ளது. உலகம் தகவல் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

உலகில்சக்திவாய்ந்த நாடுகளுக்கு இடையில் போர் நிலைமைகள் பிரகடனப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்படாது விட்டாலும் அதிகார மோதல்கள் தாராளமாக உள்ளன.

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் ☞ 2

## அரச வைத்தியர்கள் அடுத்த வாரம் முதல் தொழிற்சங்க நடவடிக்கை

### அதிதிகளுக்கான மருத்துவ சேவை புறக்கணிப்பு

அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் அடுத்த வாரம் முதல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அச்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த வாரம் முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடுமையான தொழிற்சங்கநடவடிக்கைகளைத் தொடங்கவுள்ளது.

அதனடிப்படையில் முதற்கட்டமாக சிறப்பு அதிதிகளுக்கான வைத்திய சேவைகள் புறக்கணிக்கப்படும். தொடர்ந்து அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதிகளின் மருத்துவ முகாம்கள்உள்ளிட்ட ☞ 2

## பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இரண்டு நாள்கள் பணி நிறுத்தம்

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நாடு முழுவதும் இன்றும் நாளையும் இருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளன.

இதுவொரு அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் என்று இலங்கைபொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தமக்குவழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டுமெனவும்பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கம் வலியுறுத்துகிறது.

இதனிடையே, எதிர்காலத்தில்20ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோரி தனியார் மற்றும் அரை அரச துறைசார் பணியாளர்களும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## 71 வயது நபர் கைவேலியில் சனியிரவு அடித்துக் கொலை

### 30 வயது பெறாமகன் கைது



சண்முகம்தவசீலன் புதுக்குடியிருப்புப் பகுதியில் சனிக்கிழமை இரவு அடித்துக்கொல்லப் பட்டுள்ளார்என்று பொலிஸார் தெரிவித்தனர். .

முல்லைத்தீவுமாவட்டம், புதுக்குடியிருப்பு பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கைவேலி,மயில்குஞ்சன் குடியிருப்பு பகுதியில் மது அருந்தும் இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்தவர் அவரது பெறா மகன் முறையானவரால் பொல்லுகள் மற்றும் கோடரியால்தாக்கப்பட்டு உயிரிழந்தார் ☞ 2

# தனது வர்த்தக நலன்களுக்காக கிழக்கு ஆளுநர் வடக்கு மீனவர்களை அடகு வைக்கவேண்டாம்

## மீனவர்களின் பிரதிநிதி அன்னராசா வைத்தார் சூடு

(ந.லோகதயாளன்.)

தமிழ்நாட்டில் தான் கொண்டிருக்கக்கூடிய வர்த்தகத் தொடர்புகளுக்காககிழக்குமாகாண ஆளுநர்செந்தில்தொண்டமான் வடக்கு மீனவர்களை அடகு வைக்கக் கூடாது என்று வலியுறுத்தினார் மீனவர் பிரதிநிதியான அன்னராசா.

யாழ்ப்பாணம் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச முன்னாள் தலைவரான அன்னலிங்கம் அன்னராசா மீனவர்களின்உரிமைக் காகத் தொடர்ந்து குரல் எழுப்பி வரும் ஒருவர். யாழ்ப்பாணம் தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நேற்று செய்தியா ளர்களிடம்இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண ஆளுநர்செந்தில்தொண்டமான் இந்தியதொலைக் காட்சிஒன்றிற்கு வழங்கி பேட்டிஎமதுவடமாகாண கடல்தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்புக்குள்அத்துமீறி வரவில்லை எனவும் மீன்களை பிடிக்கும் போது தற்செயலாக எல்லையைக் கடந்து விடுகிறார்கள் என்றும் இந்திய மீனவரகளின் வருகையை நியாயப்படுத்தி கருத்து தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். கிழக்கு மாகாண ஆளுநருக்கு ஒன்றை கூறிக் கொள்ள விரும்புகின்றோம், இந்தியாவில் உங்களுக்குள்ள பல ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பின்னர் தென்னிலங்கை ஊடகங்களில் எமில்காந்தன் பற்றியதகவல்கள்வெளியாகியிருந்த போதிலும், 2005ஆம் ஆண்டுதான் எமில் காந்தன் ஆளும் தரப்புகளுடனான தனது தொடர்புகளை ஏற்படுத்தினார் என்று சொல்ல முடியாது. 2001--2003 சமாதானப் பேச்சுக்களின் போதிருந்தே எமில்காந்தன் பிரதமர் அலுவலகமான அலரி மாளிகைக்கு அடிக்கடி வருகை தருபவராக இருந்தார். அப்போது எமில் காந்தன் கொழும்பு ஜெய்க் ஹில்டன் ஹோட்டலில் தங்கியிருந்தார். இருப்பினும் 2005 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியுடன், எமில் காந்தன் நாட்டை விட்டு வெளியேறி டுபாயில் வாழத் தொடங்கினார்.

அதாவது, எமில் காந்தன், ரணில் விக்கிரமசிங்கவை நன்கு அறிந்தவர் என்பதும், மஹிந்த ராஜபக்ஷவை நன்கு அறிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமில்காந்தனின் பெயர் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து திடீரென நீக்கப்பட்டமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், பயங்கரவாதிகளின் பட்டியலில் இருந்து எமில் காந்தனின் பெயர் நீக்கப்பட்டு, வரவிருக்கும் ஆண்டுக்கான அரசியல் முயற்சியில் முக்கிய பங்கு வகிக்க அவருக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

வேடிக்கை என்னவென்றால் பயங்கரவாதத் தடைப் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப்படுவதற்கு முன்னதாக கடந்த பல மாதங்களாக எமில் காந்தன் கொழும்பில்தான் தங்கியிருந்தார். ரெலோவின் சீனித் தொழிற்சாலைத் திட்டத்திற்கு ரணிலின் அங்கீகாரத்தைப் பெற்றுத் தருவதில் எமில் காந்தனின் பங்களிப்பும் இருந்தது என்று நம்பப்படுகின்றது. இருதரப்பினரும் கொழும்பில் அடிக்கடி சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

எமில் காந்தனின் பெயர் இப்போது பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருப்பதற்கான காரணம், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தனித் தனியாக அரசியல் செய்யும் தரப்புக்களை ஒருங்கிணைத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் கொண்டுவருவதுதான் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன. சீனித் தொழிற்சாலையும்கூட அந்த வகையானதாகத்தான் இருக்கக்கூடும் என்றும் அவை சந்தேகிக்கின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரூ. 20,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்பவர்களின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றை அரசு முறையாகவும் விரைவாகவும் வழங்குவதை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

## பூஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையான குற்றங்களைப் புரிந்தகைதிகள் சிறைவைக்கப்படும் உயர் பாதுகாப்பு இடமாக பூஸா சிறைச்சாலை அமைந்துள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றவாளிகள் இந்த சிறையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், நவீன தொழில்நுட்ப உபகரணங்களுடன் கூடியவகையில் சிறைச்சாலையை நவீனப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், சிறைச்சாலைக்குள் பிரவேசிக்கும் நபர்களும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், சிறைச்சாலையின் அறைகளில் சிம் அட்டைகளுடன் கூடிய கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பல்வேறு பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் இரண்டு சிம் அட்டைகள் மற்றும் சார்ஜர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## இந்த உலகிற்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் பொருளாதார ரீதியான மோதல் காணப்படுகின்றது. அதற்கான சந்தையை கையகப்படுத்துவதில் முரண்பாடுகள் உள்ளன.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையில் மோதல்கள் காணப்படுகின்றன. ரஷ்யா மற்றொரு பக்கத்தால் தன்னை விஸ்தரித்துச் செல்கின்றது. ஐரோப்பாவும் பிறிதொரு கோணத்தில் பயணிக்கின்றது.

இந்தநிலைமைகளில் இலங்கை அதிகாரமுள்ள கேந்திரமாக மாறுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போதைக்கு இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

உலகில் உள்ள அதிகார மையங்கள் மோதுவதையோ அல்லது கேந்திரமாகச் செயற்படுவதையோ இலங்கையால் தடுக்க முடியாத நிலைமையில் தான் கேந்திரமாக உள்ளது.

இலங்கையின் கேந்திர ஸ்தானத்தை மயப்படுத்தி அதிகார மோதல் காணப்பட்டாலும் உலக வரைபடத்திலிருந்து இலங்கை நீக்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் நமது அயலுறவுக் கொள்கை எவ்வாறாக இருக்க வேண்டும்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு அதிகார மையங்களுக்கும் ஆதரவளிக்காத, பங்களிப்பை வழங்காத அணிசேராத கொள்கையே அவசியமாகின்றது.

நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவுக்கு அண்மையில் கேந்திர நாடாக இருக்கின்றோம். அதனால் எமக்கான வெளிவிவகார கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் உள்ளது.

தற்போதைய நிலையில் இந்தியாவை விட்டு வெளியேறி முடிவுகளை இலங்கை கலந்தாலோசிப்பது மிகக்கடினமானதாகும். இந்தியாவுக்கு, நீங்களும் ஒரு நாடு, நாமும் ஒரு நாடு என்று கூற முடியும். எமக்கு இறைமை உள்ளது என்பதையும் எடுத்துரைக்க முடியும்.

இந்த யதார்த்தத்தினை விடவும் பிறிதொரு யதார்த்தமுள்ளது என்பதை இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவேதான் எமது வெளியுறவுக்கொள்கை தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது.

1980களில் எமது பொருளாதாரக் கொள்கை என்னவென்று பார்த்தால் விற்பனை செய்வதும், கடன்வாங்குவதும் தான் கொள்கையாக இருந்தது. அதே கொள்கைதான் தற்போதும் உள்ளது.

நாம் தீர்மானிப்பவர்களாக மாற வேண்டும். 1990களில் நாம் சுப்பர் மார்க்கெட்டுக்களுக்குச் சென்றால் அன்றிருந்த பொருட்கள் அல்ல இன்றிருப்பவை. ஆகவே நாம் சமநிலைக்குவருகைதரவேண்டும்.

உலக சந்தையில் எமது பொருட்களை மையப்படுத்த அவற்றுக்கான இடங்களை கைப்பற்றுவதற்கான திட்டங்கள் இருக்க வேண்டும். வெள்ளையர்கள் வெளியேறும் போதும் தேயிலை இறப்பர் தேங்காய் ஆகியவற்றையே நம்பினோம். தற்போதும் அதனையே நம்புகின்றோம்.

ஆகவே உலகிற்கு பொருந்தக்கூடிய அறிவார்ந்த சந்தையைக் கைப்பற்றுவதில் நாம் முன்னேற்றங்களைக் காணவில்லை. ஒரே இடத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றோம்.

நாம் சிறிய நாடாக இருக்கின்றோம். அதனால் எம்மால் உலகத்தில் மாற்றங்களில் தாக்கங்களைச் செலுத்த முடியாது. உலகப்போரை நிறுத்த முடியாது. கொடிய நோயை தவிர்க்க முடியாது. உலகப் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது, எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றபோது அவற்றின் தாக்கமும் எமக்கும் உள்ளது.

அதனால், நாம் எமக்குப் பொருத்தமானதை தொழில்நுட்ப ரீதியாக ஆராய்ந்து . அதன் ஊடாக உலக சந்தையில் முக்கியமான வகிபாகத்தினை வகிக்க முடியும் என்றார்.

## சுகாதார சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதாரத்துறையும் பல்வேறு சவால்களைச் சந்தித்து வருகின்றது. குறிப்பாக சுகாதாரத்துறையில் மனித வளப்பற்றாக்குறை அதிகரித்து வருகின்றது.

சதாரண சுகாதாரத்தொண்டர்கள் முதல் வைத்தியர்கள் வரையில் இத்தகைய நிலைமைகள் நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவதற்கான கரிசனை செலுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நிதி அமைச்சுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பிரகாரம் முதற்கட்டமாக அவசரமான மனித வளத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

சுகாதாரத்துறை அத்தியாவசித்துறை என்ற அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு நிதி அமைச்சு அனுமதி அளித்துள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது - என்றார்.

## இராமேஸ்வரம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான கே.நவாஸ் கனி இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இந்நிலையில் அவர் இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி இல்லத்தில் பிரத்தியேக சந்திப்பொன்றை நடத்தி மீனவர்கள் விவகாரம் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

அப்போது, இந்தியாவில் நடக்கும் நிகழ்வுகளை குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனியிடம் அமைச்சர் அலி சப்ரி கேட்டறிந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி தனது தொகுதிக்கு உட்பட்ட இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 27பேர்கள் சிறையில் உள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய ஆவணம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அலி சப்ரிடம் கோரிக்கை வைத்தார்.

அவரது கோரிக்கையை பரீசலிப்பார் எனவும் 27 மீனவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பார் எனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். அதேபோல் மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் சம்பந்தப்பட்ட மீனவர்களிடம் ஒப்படைக்க வேண் டும் என்றும் கோரிக்கை வைத்தார். அதுதொடர்பாகவும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## அரச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை புறக்கணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வைத்தியர்களின் கோரிக்கைகளை ஆளும் தரப்பு இதுவரையில் பொருட் படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்காமையின் காரணத்தினாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை நாம் சுகாதார அமைச்சருக்கும், உரிய அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளோம். ஆகவே எமது புறக்கணிப்பினால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு அரசாங்கமும், சுகாதார அமைச்சுமே பொறுப்பேற்க வேண்டும் என்றார்.

## தனது வர்த்தக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாபாரங்களையும் ஊடக நிறுவனங்களில் நீங்கள் மேற்கொண்டுள்ள முதலீடுகளையும் பாதுகாப்பதற்காக எமது மீனவர்களை அடகு வைக்க வேண்டாம்.

எல்லை தாண்டிய இந்திய மீனவர் பிரச்சினை சுமார் 12 வருடங்களாக நீடித்துவரும் நிலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒரு நாளிலேனும் எமது மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் என்ன எனக் கேட்டிருக்க மாட்டார். அவர் முதலில் யாழ்ப்பாணம் வரட்டும். வந்து எமது மீனவர்களை அழைத்து அவர்களின் பிரச்சனை என்ன என்று கேட்கட்டும். முடிந்தால் அதனை தீர்த்து வைக்க முயற்சி செய்யட்டும். அதை விடுத்து இந்தியாவில் உள்ள அவரது வியாபாரத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்வதற்கு எமது மீனவர்களை பலிக்கடா ஆக்க வேண்டாம் என்ற செய்தியை அவருக்கு கூற விரும்புகிறோம் - என்றார்.

# சத்திர சிகிச்சைகளை வழங்க பல இடங்களிலும் மட்டுப்பாடு

### தாதியர் சங்கச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு தேசிய வைத்தியசாலை உட்பட நாட்டில் பல வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தாதியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பி.மெதிவத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அவர் செய்தியாளர்களிடம் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமைகள் தோன்றியுள்ளன.

இதனால் வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் இரசாயன பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

உடனடியாக அவற்றை வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று வைத்தியசாலைகளில் தற்போது உள்ள பணி வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்றார்.

# 37 மீனவர்களுக்கும் விளக்கமறியல்



இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 37 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன.

மன்னார் கடலில் கைது செய்யப்பட்ட 3 படகுகளில் இருந்த 23 மீனவர்களையும் நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையுமே விளக்கமறியலில் வைக்க மன்னார் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்கள் உத்தரவிட்டன.

மீனவர்களை நவம்பர் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

ஒக்டோபர் 14 முதல் நேற்று வரையான காலப்பகுதிக்குள் மாத்திரம் இலங்கை கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 64 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 10 இந்திய இழுவை படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## 71 வயது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைவேலியைச்சேர்ந்தவரான தம்பிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 71) என்பவரே கொல்லப்பட்டார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப் பாக மாறி பொல்லுகளாலும் கோடரியாலும் தலையில் தாக்கப்பட்டதனால் காயமடைந்த மார்க்கண்டு உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கைவேலி, மயில்குஞ்சன் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர். 30 வயதான அவர் கேப்பாபிலவு இராணுவ முகாமில் பணியாற்றி வருகின்றார். இவர் போதைபொருள் பயன்படுத்தும் பழக்கமுடையவர் என்று ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைக்கலப்பிற்கு காரணம் பழைய முரண்பாடாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த சந்தேக நபரை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்திருக்கின்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சம்பந்தன் பதவி விலக வேண்டும்

## ரவிகரனும் வலியுறுத்து



தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதவி விலக வேண்டும் என மக்களின் எதிர்பார்ப்பையே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளிப்படுத்தியுள்ளார் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்துகொண்டுகருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சம்பந்தன் ஐயாவின் அரசியல் அனுபவம் தொடர்பில் அனைவருக்குமேதெரியும். அவர் ஒரு தெளிவான அரசியல்வாதி என்பதுடன் நீண்ட அனுபவசாலி என்றேபலரும் கூறுவார்கள்.

அவரது தெளிவான பார்வையும் அரசியல் அனுபவமும் எப்போதும் தேவையானது. ஆனால், வயதுமூப்பின் காரணமாக அவரால்முன்னரைப் போன்றுசெயற்படமுடியவில்லை.

குறிப்பாகஅவர்பிரதிநிதித்துவம் செய்கின்ற திருகோணமலை மாவட்டத்தில்பல்வேறுசம்பவங்கள் நடைபெறுகின்றபோது அந்த மக்கள் தங்கள் பிரதிநிதி தொடர்பில் தேடுகின்றதுடன் தங்களுக்காக ஒருவர்களத்தில்இருக்கவேண்டும் என்றுகோரியிருக்கின்றநிலைமை உள்ளது.

இவ்வாறான நிலைமையில்தான் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சில தினங்களுக்கு முன்னர் ஊடகம் ஒன்றுக்கு தெரவித்திருந்தார் என வடக்கு மாகாண சபையின் முன்னாள்உறுப்பினர்து.ரவிகரன் தெரிவித்திருந்தார். (05)



# ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்

அகில இலங்கை சைவ மகா சபையுடன்யாழ்.பல்கலைக்கழகசைவ சித்தாந்தத்துறை இணைந்து 'ஒன்றே குலமாய் திருமந்திரம் காட்டும் அன்பே சிவத்திற்கு உயிர்கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் நடத்தும் திருமந்திர ஆன்மீக மாநாடு யாழ்ப்பாணத்தில் சனிக்கிழமை ஆரம்பமானது.

பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து திருமூலரின் உருவப்படம் தாங்கி வரப்பட்டு நிகழ்வு நடைபெறும் கைலாசபதி அரங்கிற்கு கொண்டு வரப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சைவ சித்தாந்த துறைத்தலைவர் கலாநிதி பொன்னத்துரை சந்திரசேகரம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (05)

# சுமணரத்ன தேரருக்கு எதிரான முறைப்பாடு மீது விசாரணை

## நடத்தப்படும் என்கிறார் அமைச்சர் டிரான் அலஸ்

அம்பிட்டிய சுமணரத்ன தேரருக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மங்களராமய அம்பிட்டிய சுமண தேரர் தமிழர்களை வெட்டுவேன் என்பதுள்ளிட்ட இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியாகக் கருத்துக்களை வெளியிட்டு வரும் நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர் மீது நடவடிக்கைகளை உடன் எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு கடிதத்தை அனுப்பியுள்ளதோடு, மனோகணேசன், வேலுகுமார் உள்ளிட்டவர்களும் தேரரைக் கைது செய்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம், மனித உரிமை செயற்பாட்டாளர் ராஜீவ்காந் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாட்டைபதிவுசெய்துள்ளதோடு ஆதாரங்களையும் கையளித்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார். தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தேரருக்குஎதிராகவழக்கு தாக்கல் செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

இந்நிலையில், குறித்த விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் -

அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில்பொலிஸார்விசேட விசாரணைகளை முன்னெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

நாட்டில் சட்டம், ஒழுங்கை அமுலாக்குவதற்கும், அமைதியைப் பேணிக்காப்பதற்காகவும் உரிய நடவடிக்கைகள் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

ஆகவே,முறைப்பாடுகள்தொடர்பில் தற்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அந்த வகையில் வீணான சந்தேகங்களை வெளியிட வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. - என்றார். (05)

# எந்தவொரு பிரச்சினைக்கும் போர் உரிய தீர்வு ஆகாதாம்

## அமைச்சர் ஜீவன் இடித்துரைப்பு



பாலஸ்தீனத்தில் விரைவில் அமைதி நிலை திரும்ப வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு எனவும், போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலையை காணும்போது கவலையளிக்கின்றது எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்புஅபிவிருத்திஅமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன் தூதரகத்துக்கு சென்றிருந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கைக்கான பலஸ்தீன்தூதுவர்கலாநிதிசுஹைர் ஹம்தல்லா செயிட் ஐ சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சருடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், பிரதி தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

போரில்உயிரிழந்தமக்களுக்கு தமது அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளார். பலஸ்தீன் விவகாரத்தில் இலங்கை மக்கள் உள்ளநிலைப்பாட்டிலேயேதானும் இருப்பதாகவும், எந்தவொரு பிரச்சினைக்கும்போர்தீர்வல்லஎனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (05)

# மருந்துக்கூட்டுத்தாபன நிலுவைகளை செலுத்த விசேட அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன கூறுகிறார்




மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் பல்வேறு விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத்தொகையை செலுத்துவதற்கான நிதியை விடுவிப்பதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தொழில்துறை மாற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மருந்துகளுக்கான கட்டணம் செலுத்தல் தொடர்பில் சுகாதார மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க மற்றும் நான் உள்ளிட்டவர்களில் பங்கேற்றிருந்தோம். அச்சமயத்தில், விசேட அமைச்சரவை அனுமதியின் கீழ் ஒதுக்குவதற்கு தேசிய வரவு, செலவுத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த வாரம் சமர்ப்பிக்குமாறு வரவு, செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் நிலுவையில் உள்ள கட்டணங்களைச்செலுத்துதல் போன்ற அத்தியாவசிய சுகாதாரச் செலவுகளுக்கு எவ்வித தாமதமும் நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

அதேநேரம், போலி அனுமதிப்பத்திரங்களை பயன்படுத்தி மருந்துகளை இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கும் விசேட நடவடிக்கைகளை சுங்க திணைக்களத்துடன் கூட்டிணைந்து முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் வெகு விரைவில் மருந்து தட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்கள் மற்றும் தரம்குறைந்த மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதைத் தடுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்கு கொண்டுவரப்படும். - என்றார். (05)

# நுகர்வோர் அதிகாரசபைக்கான பொலிஸ் அதிகாரிகள் நியமனம்

நுகர்வோர் அதிகார சபைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவர்த்தகமற்றும்உணவுபாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வுப் பிரிவிற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகள் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளுக்குபூரணபாதுகாப்பை வழங்கநடவடிக்கைஎடுக்கப்படும்என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (05)

# 74 ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் தமிழரசு மாநாட்டை நடத்த முஸ்தீபு

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி வவுனியாவில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் நடைபெறும் குறித்த கூட்டத்தில், கட்சியின் வருடாந்த மாநாட்டை நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்படும் என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தனை பதவி விலகுமாறு குறிப்பிட்ட கருத்துகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கூட்டத்தின்போது, இலங்கைத் தமிழரசுக்கட்சி 1949 டிசெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதன் 74 ஆவது வருட பூர்த்தி எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரவுள்ளமையால் குறித்த தினத்தில் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கான முன்மொழிவைச் செய்வதற்குசிலஉறுப்பினர்கள்முஸ்தீபு செய்யவுள்ளனர். அதேநேரம், தற்போது வரையில், யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழரசுக்கட்சியின் மூலக்கிளைகளை மறுசீரமைக்கும் பணிகள் நிறைவுக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# விளையாட்டுப் பொருள்கள் அங்காடியில் தீ விபத்து

பாணந்துறையில் உள்ள கட்டடத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

அதன்படிசனிக்கிழமைகாலை இரண்டு மாடிக் கட்டடத்தில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த கட்டிடம் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமாக இயங்கிவந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாரியளவில் விளையாட்டுப் பொருள்கள் எரிந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றன.

மேலும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீவிரமாகும் நெருக்கடி

இந்த மாதம் முடிவதற்கு இன்னும் ஒரே நாள் மட்டுமே இருக்கின்றது. அதற்குள் கடன் மறுசீரமைப்பு ஒரு முடிவுக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. முன்னதாக, இந்த மாதத்திற்குள் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒரு முடிவுக்கு வரும் என்று ஆளும் தரப்பு அறிவித்திருந்தது. அதற்காகவே உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்கவில்லை என்பது தெரிகின்றது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு ஒரு முடிவுக்கு வராமல் ஆளும் தரப்பால் பொருளாதார நெருக்கடி ஒரு தீர்வை எட்டாது. இதற்கிடையில் நாட்டில் மீண்டும் தொழிற்சங்கப் போராட்டங்கள் வலுக்கத் தொடங்கியுள்ளன. அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை ஆளும் தரப்பு முன்வைக்கவுள்ள நிலையில் தமக்கு சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டங்களை அறிவித்துள்ளன.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் 20,000 ரூபா கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிக்கை கோரி நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்பு போராட்டத்தை இன்று முன்னெடுக்கின்றன அரச மற்றும் மாகாண அரச சேவையாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு.

அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி, அலுவலக சேவைகள் மற்றும் மாகாண அரசாங்க சேவைகள் என பல்வேறு சேவையாளர்கள் இணைந்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்கவுள்ளனர்.

அனைத்து அரச சேவையாளர்களும் இன்று (30) நண்பகல் 12 மணிக்கு போராட்டத்தில் ஈடுபடுவர் என்று கூட்டமைப்பின் இணைப்பாளர் சந்தன சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, எதிர்காலத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோரி தனியார் மற்றும் அரை அரச துறைசார் பணியாளர்களும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுக்கவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் அடுத்த வாரத்திற்குள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் ஊடக பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார். முதலில் சிறப்பு அதிதிகள், அரசியல்வாதிகளுக்கான சிறப்புக் கவனிப்பை நிறுத்தவதே அவர்களின் திட்டம்.

இது தவிர, இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் இன்றும் நாளையும் நாடு முழுவதும் இருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. இ–துவொரு அடையாளப் பணி நிறுத்தம் என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. கொடுப்பனவுகளின் அதிகரிப்பே அவர்களினதும் முக்கிய கோரிக்கையாக இருக்கின்றது.

இவ்வாறு தொழிற்சங்கங்கள் போராட்டங்களை அறிவித்திருப்பதும் சம்பள உயர்வு கேட்பதும் ஆளும் தரப்புக்கு மேலும் நெருக்கடியைக் கொடுக்கப்போகின்றது. ஒருபுறம் கடன் மறுசீரமைப்பைத் திட்டமிட்டபடி முழுமைப்படுத்த முடியாத நிலையில் பொருளாதார மீட்சி சிக்கலில் சிக்கித் தவிப்பது, மற்றொரு பக்கத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள், சம்பள உயர்வுக் கோரிக்கைகள் என்று இரு தலைக் கொள்ளி எறும்பாக ஆளும் தரப்பு திணறுகின்றது.

இதற்கிடையில் அமைச்சரவை மாற்றத்தின் மூலம் அரசுத் தலைவருக்கும் ஆளும் தரப்பான பொது ஜன பெரமுனவுக்கும் இடையிலும் மோதல் போக்கு ஒன்று ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் சேர்ந்து நாட்டின் நெருக்கடியை இன்னும் அதிகரிக்கப் போகின்றன.





# துயர வலிசுமந்த இடப்பெயர்வுகளும் வரலாற்றில் பாலஸ்தீனரும் தமிழரும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



பலஸ்தீனத்தில் தற்போது தொடரும் காசா இடப்பெயர்வும், ஈழத் தமிழரின் அக்டோபர் 1995 யாழ்ப்பாண இடப்பெயர்வும் ஆறாத காயங்களை மக்கள் மனதில் ஏற்படுத்தி உள்ளன.

ஆண்டாண்டு காலமாக தங்கள் சொந்த மண்ணில் வாழ்ந்த மக்கள் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு இடம்பெயர்வது என்பது வரலாற்றின் துயரம் மிகுந்த பக்கங்களாகும்.

**தமிழரும் - பலஸ்தீனரும்**

வரலாற்றில் தமிழரும், பலஸ்தீனரும் சந்தித்த பெரும் இடப்பெயர்வுகள் கறைபடிந்த நிகழ்வுகளாகும். காசாவில் உள்ள அனைத்து பலஸ்தீனியர்களும் வடக்கு காசாவை விட்டு வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் உத்தரவால் சுமார் 1.1 மில்லியன் மக்கள் கட்டாய இடப்பெயர்வை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய துயர்மிக்க பெரிய இடப்பெயர்வை யாழ். மக்கள் சந்தித்தார்கள். 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 இந்த மாபெரும் அவலமிகு இடப்பெயர்வு நடந்தது.

தற்போது காசாவில் ஐந்து பகுதிகளில் சுமார் 2.3 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். அவை வடக்கு காசா, காசா நகரம், டெய்ர்எல்பாலா, கான்யூனிஸ் மற்றும் ரஃபா என்பவாகும். இந்த நிலம் சுமார் 365 சதுர கிலோ மீற்றர் (141 சதுர மைல்கள்) கொண்டதாகும்.

41கிமீ (25 மைல்) நீளத்தில், தெற்கில் உள்ள ரஃபாவிலிருந்து வடக்கே மேற்கு கரை வரை உள்ளது.

**(வரலாற்றில் தமிழரும், பாலஸ்தீனரும் சந்தித்த பாரிய இடப்பெயர்வுகள் குருதிக்கறை படிந்த நிகழ்வுகளாக, ஆறாத காயங்களை மனதில் ஏற்படுத்தி உள்ளன)**



**பலஸ்தீனர்களின் இடப்பெயர்வும் பேரழிவும்**

1948 போரை நினைவூட்டுவதாக தற்போது நடக்கும் போரால் காசா மக்கள் வேதனை அடைந்துள்ளனர். 1948ம் ஆண்டு பலஸ்தீனத்தில் இருந்து இஸ்ரேல் தனி நாடாக உருவானது. அதன் நீட்சியாக இஸ்ரேலுக்கும், அரபு நாடுகளுக்கும் இடையே போர் வெடித்தது. கிட்டத்தட்ட ஓர் ஆண்டு நீடித்த இந்த போரின் போது 500 பாலஸ்தீன கிராமங்கள், நகரங்களை இஸ்ரேல் அழித்தது. 1948 பலஸ்தீன பகுதிகளிருந்து ஏறத்தாழ 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு தள்ளப்பட்டனர். அதன் பின்னர் அவர்களால் தங்களின் பகுதிக்கு திரும்பவே முடியவில்லை.

அப்படி இடம்பெயர்ந்தவர்களின் வாரிசுகள்தான் தற்போது காசாவில் போர் சூழலை எதிர்கொண்டு வருகின்றனர். 1948 போரின் போது கட்டாய இடப்பெயர்வுக்கு தள்ளப்பட்ட நிகழ்வை பலஸ்தீனர்கள் 'நக்பா' (பேரழிவு) என அழைக்கிறார்கள்.



**துயர்மிகு தமிழர் இடப்பெயர்வு**

28 வருடங்களின் முன் யாழ் இடப்பெயர்வானது 1995 ஒக்ரோபர் 30இல் நடந்தது. நீதி மறுக்கப்பட்ட மக்களாக தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் அன்று அறுக்கப்பட்டது. அன்றைய கொடூர நாட்கள் மிகப்பெரும் மனித அவலத்தைச் சுமந்தன.

இன்னமும் வரலாற்றில் வலிசுமந்த நாட்களாகவே அவை நிலைத்து நிற்கின்றன. யாழ்ப்பாண குடாநாட்டில் அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை ஐந்து இலட்சம் ஆகும்.

குடாநாட்டினை வடபகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த இரண்டு வீதிகளினூடாக ஐந்து இலட்சம் மக்கள் ஓர் இரவு விடிவதற்குள் கடந்து சென்ற கொடிய நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள்.

இந்தத் துயரத்தை எக்காலத்தினாலும் அழிக்க முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்கள் இன்னமும் மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றன.

யாழ். இடம்பெயர்வின்போது, இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா அப்பா என வீட்டிலே விட்டு வந்தவர்கள், நிறைமாத கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என வீதியில் ஒரு அடி எடுத்து வைப்பதற்கு ஒரு மணி நேரம் எடுத்த கோரமான நாட்கள் அவை.

சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட அந்தக் கொடூரம் மிக்க நாட்களை யாரும் மறக்க மாட்டார்கள். தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்கு பெய்த மழையை குடையில் ஏந்தி பருக்கியவர்கள், வீதி வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்து குடித்தவர்கள், வீதியில் இறந்த முதியவர்களை அந்த சதுப்பு நிலத்தில் குழி தோண்டி புதைத்த கொடுமை எல்லாம் நடந்திருக்கின்றன.

**பலஸ்தீனர்களின் நாடு இழப்பு**

1880-90களில் 15,000 எண்ணிக்கையில் இருந்த யூதர்கள் அடுத்த 30 ஆண்டுகளில் ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்கள்தொகையில் 8 சதவிகிதமாக மாறியுள்ளனர். இன்று பாலஸ்தீனத்தில் 79 சதவிகிதம் இஸ்ரேலியர்கள் வாழ்கின்றனர். 1948க்கு பிறகு 600க்கும் மேற்பட்ட இஸ்ரேலிய நகராட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய திட்டமிட்ட நில ஆக்கிரமிப்புகளால் துண்டு துண்டுகளாக பிரிக்கப்பட்டது பாலஸ்தீனம். இன்று, இரு பகுதிகளாக பலஸ்தீனத்தின் காசாவும் மேற்கு கரையும் தொடர்பற்று இருக்கின்றன.

பலஸ்தீனத்தில் 2006க்கு பிறகு, பாரிய சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டு இராணுவக் காவலுடன் இந்த இரண்டு மக்கள் பகுதிகளும் சிறை வைக்கப்பட்டிருக்கின்றன. காசாவில், சுமார் 23 லட்சம் மக்கள் மிகக் குறுகிய நிலப்பகுதியில், திறந்த வெளி சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றனர்.

இஸ்ரேலின் போர்கள் அனைத்தும் அடாத்தியாக அடைக்கப்பட்டு இருக்கும் இம்மக்களின் மீதே நடத்தப்படுகின்றன.

(8ஆம் பககம் பார்க்க..)

# வெளிநாட்டு மாணவரை மருத்துவபீடங்களுக்கு உள்வாங்கும் திட்டத்தை உடன் நிறுத்தவேண்டும்

## ஜனகன் விநாயகமூர்த்தி வலியுறுத்து

வெளிநாட்டு மாணவர்களை எமது இலங்கை அரச பல்கலைக்கழக மருத்து-வபீடங்களுக்கு உள்வாங்கும் திட்டம் முதிர்ச்சியற்ற முடிவாக இருப்பதோடு அது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அரசியல்,சமூக செயற்பாட்டாளரான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள அரச பல்கலைக் கழகங்களில் மருத்துவ பட்டப்படிப்பை தொடர்வதற்காக வெளிநாட்டில் உள்ள மாண வர்களுக்கு அனுமதி அளிக்கும் இலங்கை ஆட்சியாளர்களின் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகின்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் உள்ள அரச பல்கலைக் கழகங்களில் மருத்துவ பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக வெளிநாட்டில் உள்ள மாணவர்களுக்கு அனுமதி என்ற நிலையை பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது.

நாட்டில் உள்ள அரசாங்கங்கள் எந்த அடிப்படையில் இவ்வகையான தீர்மானங் களை எடுக்கின்றன என புரிந்துகொள்ள முடியவில்லை.

பொதுவாக அனைத்து நாடுகளும் தங்களுடைய கல்விக்கொள்கைகளை தத்தமது நாடுகளின் மனிதவள மேம்பாட்டை உறுதிப்படுத்தும் அடிப்படையிலும் தொழில் துறையினை பற்றாக்குறையற்ற வகையில் பேணும்அடிப்படையிலும்உருவாக்குவார்கள்.

ஆனால் இலங்கையில் உள்ள கல் விக்கொள்கைகள் இந்த மேற்கூறிய இரண்டு விடயங்களிலும் தொடர்பற்ற கொள்கைகளாக இருப்பது இப்படியான தீர்மானங்களை அரசாங்கங்கள் எடுப்பதின் அடிப்படையில் புலப்படுகின்றது.

முதலில்எமதுநாட்டில்எமதுபிரஜைகளை மருத்துவ பட்டதாரிகளாக போதிய அளவில் உருவாக்க வேண்டும். அவர்களை எமது நாட்டில் தொழில்புரியவைக்கும் உரிய முறைமைப்படுத்தப்பட்ட திட்டத்தை செயற்படுத்த வேண்டும். நாட்டில் மேலும் பல போதனா வைத்தியசாலைகளை உருவாக்க வேண்டும்.

மேலும் பல மருத்துவபீடங்களை எமது அரச பல்கலைக்கழகங்களில் உருவாக்க வேண்டும். எமது மாணவர்களை மேலும் அதிகமாக மருத்துவ பீடங்களுக்கு உள்வாங்கப்பட வேண்டும்.

இதனை தவிர்த்து வெளிநாட்டு மாண வர்களுக்கு இலங்கையில் மருத்துவக் கல் வியினைவழங்குவதால்என்னபலனைநாம் பெற்றுவிட முடியும்? வெளிநாட்டு மருத்துவ மாணவர்கள் மூலம் நாம் பெற எத்தணிப்பது வெறும் வெளிநாட்டு வருமானத்தையா? அவ்வாறு சிந்தித்தால் இதுவொரு முட்டாள் தனமான முடிவாகும்.

தற்போது, எமது மாணவர்களில் பெரும் தொகையானவர்கள் எமது நாட்டு பல்கலைகழகங்களில் இடம் கிடைக்காத காரணத்தால் வெளிநாடுகளுக்கு சென்று மருத்துவக்கல்வியைப் பயில்கிறார்கள். இதனால் பெருமளவு பணம் எமது நாட்டில் இருந்து வெளியேற்றப்படுகின்றது.

வெளிநாட்டு வருமானத்தை கொண்டுவருவதற்கு முதலில் எமது நாட்டு பணம் வெளிநாட்டுக்கு செல்வதை தடுக்க வேண்டும். ஆகவே, வெளிநாட்டு மாண வர்களுக்குஎமதுநாட்டில்கல்விவழங்குவதற்கு பதிலாக பல்கலைகழகங்களுக்கு சற்புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படாத எமது நாட்டு மாணவர்களுக்கு பணம் செலுத்தி கற்கும்வாய்ப்பைமுதலில்வழங்கவேண்டும்.

இதனால் எமது நாட்டு பணம் வெளிநாடுகளுக்கு செல்வது தடுக்கப்படும். அதேவேளை எமது நாட்டு மருத்துவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும். இதுவே எமது நாட்டின் சுகாதார துறைக்கு உகந்த அனுகூலமான மாற்றத்தை ஏற் படுத்தும்.

ஆகவேவெளிநாட்டுமாணவர்களைஎமது மருத்துவபீடங்களுக்கு உள்வாங்கும் திட்டம் முதிர்ச்சியற்ற முடிவாகும். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். – என்றார். (05)

# பாடசாலைக்குள் நுழைந்து மாணவன் மீது தாக்கு: குற்றச்சாட்டில் நீதிமன்ற உத்தியோகத்தர் கைது

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு நகரிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலை ஒன்றில் உட்நுழைந்து, தனது மகனை தாக்கிய இரு மாண வர்களுக்கு பதிலாக வேறொரு மாணவனை தாக்கியதில், அந்த மாணவன் காயமடைந்து வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் கடமையாற்றிவரும்உத்தியோகத்தர் ஒருவரை இன்று சனிக்கிழமை (28) கைது செய்துள்ளதாக மட் டக்களப்பு பொலிஸ் தலைமை யக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்று வரும் மாணவன் ஒருவரை சக மாணவர்கள் இருவர் தாக்கியதாகபாதிக்கப்பட்டமாணவன் தனது பெற்றோரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்து, வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்ட மாணவனின்தந்தை நீதிமன்றஊழியர் பாடசாலைக்குள் நுழைந்து, தனது ம கனை தாக்கிய இரு மாணவர்களுக்கு பதிலாக வேறொரு மாணவனை தாக்கியுள்ளார்.


அதில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை பொலிஸா ரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த தாக்குதல் தொடர்பாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவரின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து இடம்பெற்ற விசாரணையின் அடிப்படையில் நீதிமன்றில் கடமை யாற்றிவரும் தாக்குதல் நடத்திய நபரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். இது தொடர்பான மேலதி க விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Paneer & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வட மாகாண அபிவிருத்தி அதிகாரசபை நிறுவ ரணிலிடம் யோசனை முன்வைப்பு

## வடக்கு முன்னாள் ஆளுநர் ஜீவன் ஏற்பாடு





'வடமாகாண அபிவிருத்திக்கான புத்தாக்கம்' எனும் தலைப்பில் வடமாகாண அபிவிருத்தி அதிகாரசபையை நிறுவுவதற்கான யோசனையொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் முன்வைக்கப்பட்டு அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அதற்கான திட்ட முன்மொழிவை வடமாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜா கையளித்துள்ளார்.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமாகாண அபிவிருத்தி என்ற தலைப்பில் அதிகாரிகளிடம் உரையாற்றுகையில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு இணையாக வடமாகாணத்திலும் பாரிய அபிவிருத்தியொன்று இடம்பெற வேண்டுமென நம்புகின்றேன்.

யுத்தத்தால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியில் எதிர்பார்த்த அளவை இன்னும் எட்டவில்லை. எனவே, நாட்டை அந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு 10 வருடத் திட்டத்தின் கீழ் செயற்படுவோமென நம்புகிறோம். இந்த முடிவை அடைய, வெளிநாட்டு உதவிகள் மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளின் உதவியையும் பெற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அமைவாக நான் 'வடமாகாண அபிவிருத்திக்கான புத்தாக்கம்' எனும் தலைப்பில் வடமாகாண அபிவிருத்தி அதிகார சபையை உருவாக்குவதற்கான யோசனையை முன்வைத்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதனை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து அதற்கான திட்ட முன்மொழிவு தற்போது அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண அபிவிருத்தி அதிகாரசபை, சட்ட வலுவுள்ளதொரு அமைப்பாகும். தென்மாகாண அபிவிருத்தி அதிகாரசபை கடந்த 20 வருடங்களாக செயற்படுகின்றது. இது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

அதனடிப்படையில் வடக்கில் அபிவிருத்தி அதிகாரசபை செயற்படுத்தப்படுவதன் ஊடாக வெளிநாட்டு முதலீடுகளுக்கு அப்பால், புலம்பெயர்ந்துள்ளவர்களின் முதலீடுகள் மற்றும் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பாரிய சந்தர்ப்பமொன்று ஏற்படுவதற்கான நிலைமைகள் உள்ளன. ஆகவே குறித்த முன்மொழிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுகின்றபோது, அனைத்து தரப்பினரும் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். - என்றார். (05)

# வெளிநாட்டு யுவதியின் பணப்பையை திருடிய நபர்கள் இரு சிறுவர்; சாமர்த்தியத்தால் கைது

## சிகிரியாவில் சம்பவம்



சிகிரியாவை பார்க்கச் சென்று மீண்டும் தான் தங்கியிருந்த விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்த வெளிநாட்டு யுவதி ஒருவரின் பணப்பையை திருடிய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

12 மற்றும் 13 வயதுடைய இரண்டு சிறுவர்களின் சாமர்த்தியமான செயற்பாட்டால் குறித்த சந்தேக நபர்களை குறுகிய காலப்பகுதிக்குள் விரைவாக கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிகிரியாவுக்குச் சென்று மீண்டும் விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்த 22 வயதான துருக்கிய வெளிநாட்டுப் பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கிவிட்டு அவரது பணப்பையை பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அதிவேகமாக பயணித்த குறித்த மோட்டார் சைக்கிள்களை வீதியின் அருகில் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் இருவர் பார்த்துள்ளனர். மோட்டார்சைக்கிள் தொடர்பில் சந்தேகம் அடைந்த சிறுவர்கள் இருவரும் மோட்டார்சைக்கிளின் இலக்கத்தை நினைவில் கொண்டு பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர்.

பின்னர் சிறிது நேரத்திற்கு முன் இரண்டு சந்தேக நபர்கள் வெளிநாட்டு யுவதியின் பணப்பையை கொள்ளையடித்துவிட்டு அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றமை தெரியவந்துள்ளது.

அதன்படி இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர்கள் பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் சந்தேகநபர்களை 45 நிமிடங்களுக்குள் கைது செய்து சுற்றுலா பயணியிடம் இருந்து திருடப்பட்ட 225 அமெரிக்க டொலர்கள் மற்றும் 20,000 இலங்கை ரூபாவையும் மீட்டுள்ளதுடன் அவர்கள் இருவரும் தம்புள்ளை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

சிறுவர்களின் சாமர்த்தியமான செயற்பாட்டால் சந்தேகநபர்கள் இலகுவாகவும் விரைவாகவும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளைச் சம்பவத்தில் காயமடைந்த துருக்கி சுற்றுலாப்பயணி சிகிரியா பிரதேச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# ஜப்பானில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாககூறி 16 மில்லியன் ரூபாய் பணம் மோசடி; இருவர் கைது

ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 16 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பணத்தை மோசடி செய்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பான் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி 16.3 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான பணத்தை மோசடி செய்துள்ளதாக குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு 7 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. அதனடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்த குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மோசடியுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர். 35 மற்றும் 57 வயதுடைய இவர்கள் இம்புல்கொட மற்றும் ஹல்மில்லவெள பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பெரமுன ஆதரவை ஜனாதிபதி சாதாரணமாகக் கருதிவிட்டார்; ரமேஸ் சுகாதார அமைச்சர் பதவியை 3 முறை நிராகரித்தவர்

## சாகர காரியவசம் கூறுகிறார்




பொதுஜன பெரமுன நாடாளுமன்றத்தில் தனக்கு வழங்கிவரும் ஆதரவை ஜனாதிபதி மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டுள்ளார். அதன் முக்கியத்துவத்தை அவர் கருத்தில் கொள்ளவில்லை என கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் நீங்கள் சமீபத்திய அமைச்சரவை மாற்றம் குறித்து கரிசனை வெளியிட்டுள்ளீர்கள் - உங்களின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** சுகாதார அமைச்சரை மாற்றியமை தொடர்பில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ரமேஸ் பத்திரன ஒரு மருத்துவர் அவர் இன்னும் சிறப்பாகச் செயற்படுவார் என நான் தெரிவித்திருக்கின்றேன் நாங்கள் அவருக்கு பாராட்டைத்; தெரிவித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவிற்கு குறைந்தளவு அமைச்சுபொறுப்புகளே உள்ளனஎன்பதேஎங்கள்கரிசனை. ஆனால் எங்கள் கட்சியை சேர்ந்த 100 இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன தனக்கு வழங்கியுள்ள பலத்தை ஜனாதிபதி கருத்தில் கொள்ளத்; தவறியுள்ளார்.

**கேள்வி:** உங்கள் கட்சியின் கரிசனைகளை ஜனாதிபதியிடம் தெரிவித்தீர்களா?

பதில்: நான் ஞாயிற்றுக்கிழமை அவருடன் பேசினேன் ரமேஸ் பத்திரனவிற்கு சுகாதார அமைச்சு பதவியை வழங்குவது குறித்து எங்களுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை என நான் அவரிடம் தெரிவித்தேன். அதேவேளை ரமேஸ் பத்திரன இதுவரை காலமும் வகித்த பதவியை ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இல்லாவிட்டால் அது எங்களுக்கு பிரச்சினையாகிவிடும். இதுவே எனது கரிசனை.

ஏனைய கட்சிகள் குறித்து அக்கறை காட்டப்படுகின்றது பொதுஜனபெரமுன குறித்து அக்கறைகாட்டப்படவில்லை என பொதுமக்களும் கருதுவார்கள்.

**கேள்வி:** அமைச்சரவை மாற்றம் குறித்து உங்கள் கட்சிக்கு முன்கூட்டியே தெரியுமா?

**பதில்:** எங்களுக்கு அமைச்சரவை மாற்றம் குறித்து தெரியும். இரண்டு கிழமைக்கு முன்னரே கெஹலிய ரம்புக்வெலவை பதவி விலகுமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார். ரம்புக்வெல அதற்கு இணங்கியிருந்தார்.

ரமேஸ் பத்திரனவை சுகாதார அமைச்சராக பதவி வகிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். ஆனால் அவர் அதனை நிராகரித்தார் - அதனால் அது தாமதமானது. அவரை மூன்று தடவைகள் கேட்டார் அவர் அதனை நிராகரித்தார்.

எனினும் இறுதியில் அவர் இணங்கினார் ஜனாதிபதி சீனா செல்லவேண்டியிருந்ததால் இந்த விடயம் தாமதமானது.

எனினும பின்னர் பத்திரனவின் அமைச்சு பதவி மஹிந்த அமரவீரவிற்கு வழங்கப்பட்டதாக நாங்கள் அறிந்தோம். அதுவே எங்கள் கரிசனைக்குரிய விடயம்.

**கேள்வி:** கட்சியின் கரிசனைகள் குறித்து ஜனாதிபதியின் பதில் என்ன?

**பதில்:** ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். ஆரம்பத்தில் நான் ஜனாதிபதியின் செயலாளருடன் பேசினேன். அவர் ஜனாதிபதியுடன் பேசினார். ஜனாதிபதி எங்கள் கரிசனைகளை ஏற்றுக்கொண்டார். எனினும், மறுநாள் காலை அமைச்சரவை மாற்றம் இடம்பெற்றது.

**கேள்வி:** எனினும் தனது அமைச்சு பதவியின் கீழ் வரும் சில பொறுப்புகளை எடுத்து அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சிக்கு வழங்கியுள்ளனர் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளாரே?

**பதில்:** எங்கள் கட்சியின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவி வழங்கப்படவேண்டும் என்பது குறித்து எங்கள் மத்தியில் ஒருவகை புரிந்துணர்வு காணப்பட்டது.

நாங்கள் ஆரம்பத்தில் ஜனாதிபதியைக் கேட்டவேளை அவர் அனைத்து கட்சி கூட்டத்தின் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

**கேள்வி:** ஆகவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பதுதான் உங்கள் கரிசனையா?

**பதில்:** விடயம் என்னவென்றால், நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு 120 பேரின் ஆதரவு உள்ளது. இதில் 100 பேர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள். ஆகவே, நீங்கள் பொதுஜனபெரமுனவின் ஆதரவை மிகவும் சாதாரணமாகக் கருதியுள்ளீர்கள் என்பதே இங்கு விடயமாக உள்ளது.

**கேள்வி:** அமைச்சரவை மாற்றம் ஜனாதிபதியுடனான உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா?

**பதில்:** அமைச்சரவை மாற்றம் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைவில்லை. மிகவும் கவலையடைந்துள்ளோம்.

# வருமான வரி மோசடிகளை தடுக்க தகவல் கட்டமைப்பு

## அரசு தீர்மானம்

வருமான வரியேய்ப்பு மற்றும் மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் நபர்களைக் கண்டறியும் நவீன தொழில்நுட்பத்திலான விசேட தகவல் கட்டமைப்பை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திலிருந்து செயல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி அலுவலக பிரதாணி சாகல ரத்நாயக்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சீரற்ற அணுகல் மேலாண்மை தகவல் கட்டமைப்பு என்ற தொழில்நுட்பத்தையே வருமானவரியேய்ப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசாங்கம் பயன்படுத்தவுள்ளது. தேசிய வருமான வரி திணைக்களத்தின் கீழ் இந்த நவீன தொழில்நுட்ப தகவல் கட்டமைப்பு செயற்படுத்தப்படும்.

வங்கிகள், சுங்கம் மற்றும் கலால் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் இந்தத் தகவல் கட்டமைப்பின் கீழ் கண்காணிக்கப்படவுள்ளன. மேலும் இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக வரி வருமானத்தை எளிதாக சேர்த்துக்கொள்ள முடிவதுடன் வரி மோசடிகளில் ஈடுப்படுபவர்களையும் அடையாளம் காண முடியும். எவ்வாறாயினும் இந்தத் திட்டம் பல வருடங்களுக்கு முன்பாகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பல அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று குறித்த தொழில்நுட்பக்கட்டமைப்பு குறித்து பயிற்சிகளைப் பெற்று வந்திருந்தனர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக பல்வேறு தடைகள் ஏற்பட்டு செயற்படுத்த முடியாமல் போனது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், மீண்டும் வருமான வரி மோசடிகளைத் தடுக்கவும் வரி வருமானத்தை அதிகரிக்கவும் குறித்த திட்டத்தை முன்னெடுக்க உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அனுகுமுறை மாற்றம் அவசியமானால் கட்சிக்குத் தலைமை மாற்றம் தேவை

## சீ.வீ.கே.சிவஞானம் வலியுறுத்து

இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு அணுகுமுறை மாற்றம் அவசியமானால் கட்சிக்குத் தலைமை மாற்றம் தேவையாக உள்ளதென தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், வடமாகாண அவைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சமகால நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் விடுதலைப் பயணித்தில்பங்கெடுத்துவருகின்ற அரசியல்தரப்புக்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மூத்த கட்சியாகவுள்ளது.

இந்தக் கட்சியின் அண்மைக் கால அடைவுமட்டங்கள் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்களும், வாதப்பிரதிவாதங்களும், விமர்சனங்களும் காணப்படுகின்றன.

அந்த வகையில் கட்சியை அடுத்துவரும் தலைமுறையினரின் மத்தியில் முன்னெடுத்துச் செல்வதாக இருந்தால் அணுகுமுறை மாற்றம் அவசியமாக உள்ளது.

எனவே, வெளிப்படைத்தன்மையுடன் கட்சியில் அணுகுமுறை மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் தலைமைத்துவ மாற்றம் அவசியமாகின்றது.

இந்த தலைமைத்துவ மாற்றம் என்பது வெறுமனே தலைவர் என்கிற தனிநபரை நோக்கிய விடயமாகக் கருதக்கூடாது. தலைவர், செயலாளர் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து மேல்மட்ட நிர்வாகக் கட்டமைப்பிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதன் மூலமாகவே தமிழரசுக்கட்சிக்கும், மக்களுக்கும் இடையில் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இடைவெளிகளைக் குறைத்து மீண்டும் உத்வேகத்துடன் பயணத்தை முன்னெடுக்க முடியும். - என்றார்.

# மூன்று பாடசாலை மாணவர்கள் மஸ்கெலியா பிரதேசத்தில் மாயம்

மஸ்கெலியா பிரதேசத்தில் மூன்று பாடசாலை மாணவர்கள் கடந்த வியாழக்கிழமை காணாமல் போயுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காணாமல்போனவர்கள் நல்லதண்ணி, லக்ஷபான மற்றும் வாழைமலை பிரதேசங்களில் வசிக்கும் மஸ்கெலியா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களாவர்.

இவர்கள் கடந்த வியாழக்கிழமை பாடசாலைக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டு வெளியேறச் சென்ற நிலையில், மீண்டும் வீடு திரும்பவில்லை எனவும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து பொலிஸ்விசாரணையில் மாணவர்கள் நல்லதண்ணி பிரதேசத்தில் கடை ஒன்றில் உணவருந்தியுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த மாணவர்கள் குடிநீர் குழாயை உடைத்ததற்காகத் தங்களது பெற்றோரால் கண்டிக்கப்பட்டு, அதன் காரணமாக வீட்டை விட்டு வெளியே சென்றிருக்கலாம் என சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நல்லதண்ணி பொலிஸார் சிறுவர்களை தேடும் பணியைத் தொடர்ந்து வருகின்றனர். (05)

# கலாநிதி ஆர்.விஜயகுமார் பேராசிரியராக பதவியுயர்வு

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பணியாளர் திறன் விருத்தி மையத்தின் பணிப்பாளரும், முகாமைத்துவகற்கைகள்வணிக பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை சனிக்கிழமை வழங்கியது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம், 28ஆம் திகதி காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச்சுற்றறிக்கைநியமங்களுக்கு அமையத் திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி ஆர். விஜயகுமாரனின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த மூதவையால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், பணியாளர் திறன் விருத்தி மையத்தின்பணிப்பாளரும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் நிதிமுகாமைத்துவத்துறைசிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆர். விஜயகுமாரன்நிதிமுகாமைத்தவத்தில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (05)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த சைக்களில் பரு. முனை முதல் டிக்வெல வரை பயணம்

இலங்கையில்சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் முயற்சியாக சர்வதேச சுற்றுலாக்களை ஈர்க்கும் வகையில் பருத்தித்துறை முதல் டிக்வெல்ல வரையிலான சைக்கிள் பயணம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

36 மணித்தியாலங்களில் சுமார் 600 கிலோ மீற்றர் தூரத்தை சைக்கிள் மூலம் கடக்க தீர்மானித்து, இந்த பயணத்தில் ஈடுபடவுள்ளனர்.

வடமராட்சி - பருத்தித்துறை, சற்கோட்டை முனை பகுதியில் இருந்து நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு சைக்கிள் பயணம் மாத்தறை மாவட்டம் - டிக்வெல்ல முனையை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு சென்றடையும்.

தென்னிந்திய சுற்றுலாத்துறை அமைச்சின் இளைஞர்கள், சுற்றுலாவில் பங்கெடுக்க வந்த இளைஞர்கள், சர்வதேச சைக்கிள் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட 65 சைக்கிள் ஓட்ட வீரர்கள் இந்த சைக்கிள் பயணத்தில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# துயர வலிசுமந்த இடப்பெயர்வுகளும்........







(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், பலஸ்தீனத்தின் தரை, வான் மற்றும் கடல்வழி எல்லைகள்அனைத்தும்இஸ்ரேல் இராணுவத்தால்பாதுகாக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

இதனால், காசாவிற்கான உணவு, குடிநீர், மின்சாரம், மருத்துவ உதவிகள் ஆகிய அனைத்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலேயேஇருக்கின்றன. போர் அற்ற காலங்களிலு-ம்கூட பாலஸ்தீனத்தின் 63% அதிகமான மக்கள் உணவுப் பாதுகாப்பில்லாத நிலையிலேயே வாழ்கின்றனர். காசாவின் குடி தண்ணீரில்தற்போது 90% மேல் பயன்படுத்தமுடி யாத நிலைக்கு மாற்றப்பட்டு இருக்கின்றது.

போரின்போது அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் முற்றும் முழுவதுமாக தடுத்து நிறுத்தப்படும்.

ஒவ்வொரு போரின் போதும் சர்வதேச சட்ட விதி களை மீறி இத்தகைய மனித உரிமை மீறலை செய்கிறது இஸ்ரேல். கொள்கை அடிப்படையில் திட்டமிட்டு இவை நடத்தப்படுகின்றன. இருப்பினும், உலக நாடுகள் கண்டும் காணாதவாறு கடந்து செல்கின்றன.

### செம்மணியால் வழி தேடிய அவலம்

'சூரியக் கதிர்' ராணுவ நடவடிக்கைகள் போல தமிழ் பேசும் மக்கள் மீது தொடுக்கப்பட்ட கொடுமையான ஆக்கிரமிப்புக்கள் இன்று நேற்று மட்டும் நடந்தவை அல்ல. இந்த சூரியக்கதிர் நடவடிக்கை 1995 அக்டோபர் 17 தொடங்கப்பட்டது. பலாலி, காங்கேசன்துறை போன்ற படைத்தளங்களிலிருந்து முழு யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றும் நோக்கில் படைத் தரப்பினர் போரினைத் தொடங்கி யிருந்தார்கள். எங்கும் வான்வழித் தாக்குதல்களும் ஷெல் வீச்சுக்களும் துப்பாக்கிச் சூடுகளும் சரமாரியாக நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில்மின்சாரம் இல்லாத அந்தக் காலத்தில் , அன்றைய கும்மிருட்டினில் அத்தனை மக்களும் தங்கள் சொந்த வாழ்வின் வேர்கள் பிடுங்கி எறியப்பட்டு, எங்கே போவது, என்ன செய்வது என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு செம்மணியால் நடந்தார்கள். விமானக் குண்டு வீச்சினால் ஆயிரக்கணக்கில் மக் கள் மடியும் நிலையிலிருந்தும், வெட்ட வெளி களில் பல மணிநேரங்களிற்கும் மேலாக நடக்க வேண்டியிருந்தனர். மூடை முடிச்சுக்களைக் கட்டி மக்கள் எல்லோரும் வீதிகளில் இறங்க வீதிகளும் இறுகிப்போயின. நடந்தும் தங்க இடமெதுவும் இன்றியும் ஆலயங்கள், தேவாலயங்கள், பேருந்து நிலையங்கள் என கண்ணில் பட்ட இடங்களில் மக்கள் தங்கள் நாட்களைக் கழித்தனர்.

### வரலாற்று வலியை யார் மறப்பர் ?

அன்றையயாழ். மக்களின் இரவு மிகப்பெரும்ம னித அவலத்தை சுமந்தது. இனி வீடு வருவோமோ என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது என்ற திசை தெரியாதவர்கள், சொந்தங்களை தொலைத்து விட்டு வந்தவர்களாக, காலங்காலமாய் வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே இரவினில் அவதிக்குள்ளான வலி முடிவடையாமல், இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

உலக வரலாற்றில் யாழ். மக்களின் துயரமிகு இடப் பெயர்வைப் போல வேறு எந்த உலக நாட்டு மக்களும் சந்தி த்திருக்க மாட்டார்கள்.

1995 யாழ். இடப்பெயர்வு தமிழ் மக்களின் துயர வரலாற்றில் இடம்பெற்றது. அந்தக் கொடிய போரால், யாழ்ப்பாணம் தீவிர போர்க் காயங்களுக்கு உள்ளானது. இன்றுவரை ஆறாத காயங்களும் சிதைவுகளும் மக்கள் மனதில் ஏற்பட்டுக் கொண்டேதானிருக்கின்றன.

# தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டு பொலிஸாரைக் கட்டிப்பிடித்தவர் சாவு

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை கட்டிப்பிடித்த சம்பவத்தில், காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஞ்சோலை பகுதியில் வைத்து இந்த சம்பவம் இடம்பெற்றது.

போதைப்பொருள் பாவனையாளர் ஒருவர் தனது குழந்தையை தாக்கிவிட்டு, தனது உடம்பில் பெற்றோலை ஊற்றிக்கொண்டு, தனக்குத்தானே தீ வைத்துக்கொண்டபோது அதனை தடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தீக்காயங்களுக்கு உள்ளானார்.

அதனையடுத்து, தீக்காயங்களுக்குள்ளான குறித்த நபரும் பொலிஸ் உத்தியோகத்தரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே, தீ வைத்துக்கொண்ட குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 37 வயதானவர் என்றும் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் கூறப்படுகிறது.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்ந்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மதுபோதையில் வாகனத்தை செலுத்திய முன்னாள் பிரதிபொலிஸ்மா அதிபர் கைது



மது போதையில் வாகனத்தை செலுத்தி ஏனைய வாகனங்களுடன் மோதி சேதத்தை ஏற்படுத்திய குற்றச் சாட்டில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன கைது செய்-யப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை இரவு வெள்ளவத்தை, மெரீன் டிரைவ் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை பொலிஸ-ாரால் கைதுசெய்யப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவை நீதி மன்றில்ஆஜர்படுத்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2023இல் வெளியிடப்பெற்றது.